**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.198** **நாள் : 10.06.2026**

சென்னை மாநகர மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்/ மாநகராட்சி துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சென்னை மாநகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி தொடங்கப்படவுள்ளதையொட்டி கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடுத்த தேவையான மேற்பார்வையாளர்கள் மற்றும் கணக்கெடுப்பாளர்கள் பட்டியல் தயார் செய்தல் தொடர்பாக, தொடர்புடைய துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (10.06.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த் துறை, பள்ளிக் கல்வித் துறை, கூட்டுறவுத் துறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம், புள்ளியியல் மற்றும் பொருளாதாரத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**